பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 07 2026 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு முழுவதும் இளநிலை மருத்துவப் படிப்புக்கான சேர்க்கையில் மாணவர்களுக்கு உகந்த நடைமுறையைப் பின்பற்ற அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மீது தவறான குற்றச்சாட்டுகளைக் கூறுவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

3. மகாராஷ்டிராவில் பள்ளிகளுக்கு அருகில் பதப்படுத்தப்பட்ட பாக்கெட் உணவுகளையும், குளிர் பானங்களையும் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

4. ஜப்பான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

5. காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் இளநிலை மருத்துவப் படிப்புக்கான சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையையும், மாணவர்களுக்கு உகந்த நடைமுறையைப் பின்பற்றவும் அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

மருத்துவப் படிப்பு கலந்தாய்வுக்கான தயார் நிலை குறித்து புதுதில்லியில் அவர் ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், கலந்தாய்வு நடைமுறை வெளிப்படையானதாகவும், நியாயமானதாகவும், தகுதி அடிப்படையிலும் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சேர்க்கை நடைமுறையில் வலுவான தொழில்நுட்பப் பயன்பாட்டை பராமரிக்கவும், குறைகளுக்கு உடனடி தீர்வு காண்பதை உறுதி செய்யவும் கலந்தாய்வு இணையதளம் உரிய முறையில் செயல்பட வழிவகை செய்யுமாறும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

கலந்தாய்வில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்களின் குறைகளுக்குத் தீர்வு காண அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யுமாறு திரு. ஜெ.பி. நட்டா அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

**<<<<>>>>**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மீது தவறான குற்றச்சாட்டுகளைக் கூறுவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றத்தில் முறையற்ற சொற்களை அவர் பயன்படுத்துவதாக தெரிவித்தார்.

திரு. ராகுல் காந்தி கூறியதுபோல் உள்துறை அமைச்சர் அல்லது எந்தவொரு அமைச்சரும் மாணவர்களின் போராட்டத்தின்போது துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிடவில்லை என்று கூறினார்.

இதற்கிடையே மாணவர்கள் போராட்டத்தின்போது துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை என்றும், இதுபோன்ற உத்தரவை யாரும் அளிக்கவில்லை என்றும் பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா கூறியுள்ளார்.

எந்தவொரு ஆதாரமும் இன்றி திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டுவதாக அவர் தெரிவித்தார்.

**<<<<>>>>**

மகாராஷ்டிராவில் பள்ளிகளுக்கு அருகில் பதப்படுத்தப்பட்ட பாக்கெட் உணவுகளையும், குளிர் பானங்களையும் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் திரு. துக்காராம் முண்டே, பள்ளிகள் இருக்கும் பகுதிகளில் இருந்து 50 மீட்டர் தூரத்திற்குள் அதிக அளவில் கொழுப்பு, சர்க்கரை, உப்பு

ஆகியவற்றைக் கொண்ட பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை விற்கவோ, விளம்பரப்படுத்தவோ, இலவசமாக வினியோகிக்கவோ கூடாது என்று கூறியுள்ளார்.

குழந்தைகளிடையே ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதற்கு இந்த தடை கடுமையாக அமல்படுத்தப்படும் என்று மகாராஷ்டிரா உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் தெரிவித்தார்.

<<<<>>>>

பிஹாரில் தர்பங்கா மற்றும் Madhubani-யில் மூடப்பட்ட சர்க்கரை ஆலைகளை மீண்டும் திறக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் பிஹார் புதிய விளையாட்டுக் கொள்கைக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கான பிரதமரின் நுண்ணுயிர்ப் பாசன திட்டத்தின்கீழ், 97 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்தவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக பிஹார் மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அரவிந்த் குமார் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கரில் பிஜப்பூர் மாவட்டத்தில் 5 பெண்கள் உட்பட 8 மாவோயிஸ்ட்கள் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

முன்னதாக சரணடைந்தவர்கள் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 49 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாக பிஜப்பூர் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. உமேஷ் குப்தா கூறியுள்ளார்.

சத்தீஸ்கரை சேர்ந்த இந்த மாவோயிஸ்ட்கள், ஜார்கண்ட் மாநிலத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆந்திராவில் முதலீடு செய்வது குறித்து தைவான் நாட்டைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவை சந்தித்து விவாதித்தனர்.

அமராவதியில் நடைபெற்ற இப்பேச்சுகளின்போது முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும், மேம்பட்ட உற்பத்தி, மின்னணுப் பொருட்கள், செமிகண்டக்டர் மற்றும் தொழில்நுட்பத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்தனர்.

அப்போது ஆந்திரப்பிரதேசத்தில் முதலீட்டாளர்களுக்கு உகந்த கொள்கைகள், வலுவான கட்டமைப்பு, சரக்குப் போக்குவரத்து வசதி, வளர்ந்து வரும் உற்பத்தி சூழல் குறித்து திரு. சந்திரபாபு நாயுடு எடுத்துரைத்தார்.

விரைவான ஒப்புதல்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு ஆதரவு அளிப்பதில் ஆந்திரப்பிரதேச அரசின் உறுதிப்பாடு குறித்தும் திரு. சந்திரபாபு நாயுடு விளக்கினார்.

**<<<<>>>>**

பிஹார், குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு சற்றுமுன் தொடங்கியது.

பிஹாரில் பாங்கிப்பூர், குஜராத்தில் Manjalpur, மத்தியப்பிரதேசத்தில் தாதியா சட்டப்பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது.

**<<<<>>>>**

கேரளத்தில் கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர் மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து வயநாடு மாவட்டத்தில் கல்வி நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

8 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் அடுத்த 2 நாட்களுக்கு மழைப்பொழிவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஒடிசாவில் மீண்டும் கன முதல் மிக கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து மகாநதியில் மிதமான வெள்ளப்பெருக்கு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு ஆற்றுப் படுகைகள் தீவிரமாக கண்காணிப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பத்ரக் மாவட்டம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்கள் நிவாரண மையங்களை விட்டு வெளியேற வேண்டாம் என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும் நுவபடா, Kalahandi, Nabarangpur, Koraput மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகளை தடையின்றி மேற்கொள்ள 8 மாவட்டங்களில் அதிகாரிகளின் விடுமுறையை ஒடிசா மாநில அரசு ரத்து செய்துள்ளது.

<<<<>>>>

ஜப்பான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

62 பேர் காயமடைந்ததாகவும், பலரைக் காணவில்லை என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

நிலநடுக்கம் காரணமாக சுமார் 34 ஆயிரத்து 900 வீடுகளில் மின்தடை ஏற்பட்டுள்ளதாகவும், 15 ஆயிரம் வீடுகளில் குடிநீர் வினியோகம் தடைபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண முகாம்களில் 8 ஆயிரத்து 800க்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி 3-0 என்ற ஆட்டக் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

Manush Sha, Manav Thakar, Harmeet Desai ஆகியோர் வெற்றி பெற்றனர்.

மகளிர் பிரிவில் இந்திய அணி 3-1 என்ற ஆட்டக் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

Sreeja Akula, Syndrela Das, Sreeja ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இறுதி ஆட்டத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி மலேசியாவை எதிர்கொள்கிறது. இப்போட்டி வரும் 2-ம் தேதி நடைபெற உள்ளது.

--------------

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Dilip Gavit தங்கப் பதக்கம் வென்றார்.

கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பாரா 100 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மற்றொரு இந்திய வீரர் Mohammed Basil வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் நீளம் தாண்டுதலில் ஸ்ரீசங்கர முரளி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

**<<<<>>>>**